# திருமுறைகளும் திருக்குறளும்

டாக்டர் என். இ. சண்முகம்
சிங்கப்பூர்

"வானமளந்த தனைத்தும் அளந்திடும் வண்மொழி" எனத் தமிழ் மொழியை வாழ்த்திச் சென்றார் பாரதியார். இலக்கண வளங்களுடன் இலக்கியச் செல்வங்களை நிரம்பப் பெற்று ஆயிரக்கணக்கான ஆண்டுகள் அளவில் உயர்தனிச் செம்மொழியாக விளங்கி வருகின்றது நம் தாய்மொழி. அப்படிப்பட்ட தமிழ் மொழிக்குச் சிறப்பூட்டும் வகையில் நூல்கள் பலவற்றை ஆக்கி அளித்த பெரியார்கள் -பேறறிஞர்கள் பலர் இருப்பினும் தமிழ் மொழிக்கு நாதி என நாவுக்கரசரையும் திருவள்ளுவரையும் குறிப்பிடுவர் நூலாசிரியர்கள். நாவுக்கரசருடன், திருமுறைகளை அளித்துச் சென்ற சைவப் பெரியார்களும் தமிழ் மறையினை யாத்தளித்த திருவள்ளுவரும் நம் தமிழ் மொழிக்கு ஆழ்ந்த உறுதியான பாதுகாப்பினை அளித்துச் சென்றுள்ளார்கள். பன்னிரு திருமுறைகளையும் அருளிய பெருமக்கள் சைவ சமயப் பெரியார்கள்; பன்னிரு திருமுறைகளும் பக்தி சுவை சொட்டச் சொட்ட பாடப்பட்ட அருளுணர்வை ஊட்டும் நூல்களாகும்.

20 நூற்றாண்டுகட்கு முன்பாக திருவள்ளுவர் அளித்த திருக்குறளோ சமயம் கடந்த தலை சிறந்த நீதிநூல் -வாழ்க்கை நூல், திருக்குறளில் காணப்படும் அருங்கருத்துக்கள், வாழ்க்கை நெறிகள் பல திருமுறைப் பாடல்கள் பலவற்றிலும் ஆங்காங்கே காணப்படுகின்றன. அறநூல் பாடிய திருவள்ளுவரும் அருள்நூல்கள் பாடிய நாயன்மார்களும் மக்கள் நல்வழியில் சென்று அறநெறி வாழ்க்கை வாழ்ந்திட வேண்டும் எனக் கருதினார்கள். திருக்குறள், தேவார திருவாசகம் போன்ற நூல்கள் அனைத்தும் ஒரே பொருளையும் குறிக்கோளையும் கொண்டுள்ளன. அவை ஒத்த மதிப்பும், சிறப்பும், பயனும் உடையன. இதனை,

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசகமென்றுணர்"

என்ற வெண்பாவினால் நன்கறியலாம். அத்தகைய அடிப்படையில் திருமுறைகளில் திருக்குறள் கருத்துக்கள் மிளிரும் ஒரு சில எடுத்துக்காட்டுகளைக் கீழே காணலாம்.

"யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரைதானே" என்றார் திருமூலர். யாவரோடும் இனியவை கூறி இன்புறச் செய்து தாமும் இன்பமாய் வாழ எல்லோராலும் முடியும். அப்படியிருந்தும் சிலருக்கு இனியவை கூற மனம் ஒருப்படுவதில்லை. இதைத் திருவள்ளுவர் ஓர் அழகான உவமை மூலம் விளக்குகின்றார். ஒருவன் தன்னுடைய தோட்டத்தில் உள்ள சுவை மிக்க தீங்கனிகளை விடுத்து அயலானுடைய தோட்டத்து சுவையற்ற காய்களைக் கவர்ந்து உண்பது எவ்வளவு அறிவற்ற செயலோ அது போன்றதுதான் பேசக்கூடிய இனிய வார்த்தைகள் இருந்தும் அவற்றை விடுத்து இன்னாத சொற்களைப் பேசுதல்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந்தற்று"

என்பது திருக்குறள். திருவள்ளுவர் கையாண்ட "கனியிருப்பக் காய்கவர்தல்" என்னும் உவமையினை அப்பரும் கையாண்டுள்ளார் என்பது நினைவு கூரத்தக்கது. தன் திருமேனியெல்லாம் வெண்ணீறு அணிந்துள்ள சிவபெருமான் திருவடிகளை மறந்து தாம் நீண்ட நாட்கள் சமண சமயம் சார்ந்து வாழ்ந்ததை எண்ணி வருந்திய அப்பர் பெருமான் வள்ளுவரின் உவமையைக் கையாண்டு

"மெய்யெல்லாம் வெண்ணீறு சண்ணித்த மேனியன் தாள் தொழாதே
உய்யலாமென் றெண்ணி உறிதூக்கியுழி தந்தென் உள்ளம் இட்டுக்
கொய்யுலா மலர்ச் சோலைக் குயில் கூவ மயிலாலும் ஆரூரைக்
கையினால் தொழாதொழிந்து கனியிருப்பக் காய்கவர்ந்த கள்வனேனே"

என்ற தேவாரம் பாடியருளினார்கள்.

நல்ல செயல்கள் எதையும் பிறகு பார்த்துக் கொள்ளலாம் எனக் காலம் தாழ்த்தாது அவ்வப்பொழுதே செய்து முடிக்க வேண்டும். நம் வாழ்நாளின் முடிவு எக்காலத்தும் வரக்கூடும்; எனவே உயிர் உள்ள போதே நல்வினைகளுக்கெல்லாம் தலையாயதாகிய இறை வழிபாட்டை மேற்கொண்டு திருப்பணி ஆற்றிட வேண்டும். நோயும், மூப்பும் அதனால் தளர்ச்சியும் அடைந்து செயலிழந்து போகு முன்பே இறைவனை நினைக்கவும், நினைந்து அழைக்கவும், அழைத்து வழிபடவும் வேண்டும். இதனையே திருவள்ளுவர்

"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப்படும்"

எனக் கூறியுள்ளார். தலைமுடி நரைத்து, உடல் நரம்புகள் தளர்வுற்று பேச்சு வார்த்தைகள் தடுமாற வயது முதிர்ந்து நடமாட்டம் முடியுமுன்பே அறச் செயல்கள் செய்வதன் பயனை அறிந்து செயல்படுக நெஞ்சமே என்ற அதே கருத்தை சுந்தர மூர்த்தி சுவாமிகள்

"புறந்திரைந்து நரம்பெழுந்து நரைத்து உரையால் தளர்ந்து
அறம்புகுந்து நினைப்பது ஆண்மை அரிதுகாண் இஃது அறிதியேல்
திறம்பியா தெழு நெஞ்சமே சிறுகாலை நாமுறு வாணியம்
புறம்பயத்துறை பூதநாதன் புறம் பயந்தெழப்போ துமே"

எனப் பாடியருளினார்கள்.

"கற்றதனா லாயபயனென் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

என்ற வள்ளுவர் வாக்கினை நாம் அனைவரும் அறிவோம். கற்ற கல்வியின் பயன் இறைவன் திருவடிகளைத் தொழுது மேன்மை அடைதலே என்பது இக்குறளின் பொருள். இறைவன் திருவடிகள் பிறவிப் பிணிக்கு மருந்தாகையால் "நற்றாள்" என்றும், காணமுடியாத பேரறிவாய் இருக்கின்றான் இறைவன் என்ற உண்மையினை உணர்வதே நாம் கற்கும் கல்வியின் பயன் என்றும் அறிவுறுத்துகின்றார். வள்ளுவர் பெருந்தகை. இதே கருத்தினை "நல்வினைப் பயன் நான்மறையின் பொருள், கல்வியாய கருத்தன் உருத்திரன்" என்று திருஞானசம்பந்தரும், "கல்லாதார் மனத்தணுகாக் , கடவுள் தன்னைக் கற்றார்கள் உற்றோரும் காதலனை" என்று அப்பரும், "கற்ற கல்வியினும் இனியானை" என சுந்தரமூர்த்தி நாயனாரும் வலியுறுத்தியுள்ளார்கள்.

மாணிக்க வாசகப் பெருமான் அருளிச் செய்த திருவாசகத்தில் பல வரிகள் திருக்குறள் அடிகளோடு ஒத்து வருதலைக் காணலாம். "ஓராதாருள் ளத்து ஒளிக்கும் ஒளியானே" என்பது சிவபுராண வரி. இதற்கிணையாக,

"ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு"

என்னும் திருக்குறளைக் கருதலாம். "மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சாராமே" என்பது சிவபுராணம்.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"

என்பது திருக்குறள். "வற்றல் மரம்போல் நிற்பேனோ" என்பது திருவாசகம்; "வற்றல் மரந்தளிர்த்தற்று" என்பது திருக்குறள்.

"வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்பிறப்புச் சிவம் வேண்டார்தமை நாளும்
தீண்டேன் சென்று சேர்ந்தேன் மன்னு திருப்பெருந்துறை இறைதான் பூண்டேன் புறம்போகேன் இனிப் புறம் போகலொட்டேனே"

என்ற திருவாசகப் பாடலுக்கொப்ப அவா அற்ற தன்மை போலச் சிறந்த செல்வம் -இணையான செல்வம் வேறேதும் இல்லை, இவ்வுலகின்கண் என்ற பொருளுடைய

"வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்பது இல்"

என்ற திருக்குறளைக் கருதலாம்.

இளையான் குடிப்பகுதியில் வேளாண் மரபில் பிறந்த மாறனாரின் வரலாறு -வரலாற்று நிகழ்ச்சியை

"இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர்"

என்னும் திருக்குறள் அடிகட்கு எடுத்துக் காட்டாகக் கருதலாம். பெரிய புராணத்தில் கண்ணப்ப நாயனார் வரலாறு அன்பின் திறத்தை வெளிப்படுத்துகின்றது. கண்ணப்பர் இறைவனிடம் கொண்ட அன்பின் ஆழம்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையர்
என்பும் உரியர் பிறர்க்கு"

என்னும் திருக்குறள் அடிகட்கு இலக்கணமாகத் திகழ்கின்றது.

அறநெறியினைத் திருக்குறள் வலியுறுத்துவது போன்றே அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் நான்கையும் நீக்கி வாழ்வதே சிறந்த அறம் என்று குறள் விளக்குவது போன்றே திருமுறைகளைப் பாடிய அடியார்களும் அறநெறியில் நின்றொழுகி நன்னெறியை மக்கள் கடைப்பிடித்தொழுக வேண்டும் என வலியுறுத்தியுள்ளதைக் காணலாம்.

பகைவனுக்கும் அருள்வாய், இன்னா செய்தார்க்கும் இனியவே செய்க, இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல் போன்ற அன்பு நெறிகளை, அறநெறிகளை, ஒழுக்க நெறிகளை திருமுறைகளும் திருக்குறளும் எடுத்துச் சொல்கின்றன. அப்படிப்பட்ட உயர்ந்த நூல்களில் ஒன்று பக்தி நூல்; மற்றவை நீதி நூல். திருக்குறள் உலகியலை எடுத்துக் கூறுவது; திருமுறைகள் அருளியல் கூறி உண்மைப் பொருளை விளக்குவன. இரண்டுமே நவில்தொறும் நவில்தொறும் புதிய புதிய பொருள் தந்து இன்பம் பயப்பன; உள்ளத்தைச் செம்மைப் படுத்தும் -தூய்மைப் படுத்தும் தன்மையன.